மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

உ. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

*திரு என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசின்மீது கொடுக்கப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்மீது விவாதம் 4, 5 தேதிகளில் தொடரப்படும் என்று தாங்கள் அறிவித்தீர்கள். ஆனால், இன்றைய தினம் காலையிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு நான் ஒரு அறிவிப்பு தரப் போகிறேன். அதற்குப் பிறகு தாங்கள் பேச வேண்டிருக்காது. எனவே, உட்காருங்கள்.

திரு என். எஸ். வி. சித்தன்: எனக்குத் தாங்கள் பேச அனுமதி கொடுத்தீர்கள். எனவே, பேச அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்காக என்பதைப் பற்றித் தெரியாமல் முதலில் அனுமதி கொடுத்தேன். அது என்ன என்று தெரிந்த பிறகு, இப்போது அனுமதியை மறுக்கிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன்: அனுமதி கொடுத்துவிட்டு பாதியிலே நிறுத்துவது சரிதானா? எனவே, தயவுசெய்து பேச அனுமதியுங்கள். சட்டசபையில் அ. தி. மு. க. அரசின்மீது கண்டனத் தீர்மானம் வந்திருக்கிறது. விவாதம் 4. 5 தேதிகளில் என்றிருந்தது. அதைத் தாங்கள் அறிவித்தீர்கள். இப்போது அதிலே மாற்றம் வந்திருக்கிறது. 5, 6 தேதிகளில் என்று இன்று காலை 'தினத் தந்தி' பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. இந்தச் செய்தி சரியா? சரி என்றால், இங்கே சபை நடந்து கொண்டிருக்கும்போது, இங்கே அறிவிப்பதற்கு முன்னரே இந்தப் பத்திரிகையில் வந்திருப்பது சரியா என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 12.20)

மாண்புமிகு பேரவத் தலைவர்: இதற்குத்தான் நான் உங்களைப் பேசவேண்டாம் என்று சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்துதான் இந்த முடிவெடுக்கப் பட்டது. தலைவர்களுக்குத் தெரியும். உங்களுக்கு அவர்கள் சொல்லவில்லை. இதற்கு நான் பொறுப்பில்லை. உட்காருங்கள்.

(பேரவைத் தலைவர்)

30-1-198- ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சிநிரலின் விவரம் வருமாறு

31-1-1981 (சனிக்கிழமை) — தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.

1-2-1981 (ஞாயிற்றுக்கிழமை) — விடுமுறை.

2-2-1981 (திங்கட்கிழமை) — தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்—தொடர்ச்சி.

3-2-1981 (செவ்வாய்க்கிழமை) — பேரவைக் கூட்டம் இல்லை.

4-2-1981 (புதன்கிழமை) — ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சியும் பதிலுரையும்.

5-2-1981 (வியாழக்கிழமை)
6-2-1981 (வெள்ளிக்கிழமை) — அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.

7-2-1981 (சனிகிழமை) — 1980-81 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் அதற்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தலும்.

8-2-1981 (ஞாயிற்றுக்கிழமை) — விடுமுறை.

9-2-1981 (திங்கட்கிழமை)
10-2-1981 (செவ்வாய்க்கிழமை) — அரசு அலுவல்கள்.

11-2-1981 (புதன்கிழமை) — தேவை யிருப்பின். அரசு அலுவல்கள்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.